திரு. என். பெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் ஒரு குளத்தைப்பற்றிக் கேட்டார்கள். அங்கு ஐந்தாறு சின்னஞ்சிறு கண்மாய்கள் மூலம் இப்போது நீர்ப்பாசனம் செய்யப்பட்டு வருகிறது. இதிலுள்ள விவசாயிகளுக்கு இன்னும் பணம் கொடுக்கப்படவில்லை. ஆகவே இந்த விவசாயிகளுக்கு உடனடியாகப் பணம் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அரசு முன் வரும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னபோது, சிலர் கோர்ட்டுக்குப் போயிருப்பதால் பணம் பட்டுவாடா செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். கீழ்முகம் என்ற இடத்திலுள்ள பழைய பஞ்சாயத்து தலைவர் பாண்டித்தேவர் என்பவர் எந்தவிதமான கோர்ட்டுக்கும் போகவில்லை. பணம் பட்டுவாடா செய்யவேண்டும் என்று அரசுக்கு மாறி மாறி மனு செய்து கொண்டிருக்கிறார்கள். 20 ஆண்டுகள் ஆகியும் இன்னும் அவருக்குப் பணம் கொடுக்கவில்லை. ஆகவே, இந்தக் குறிப்பிட்ட குடும்பத்திற்குப் பணம் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அப்படிப்பட்ட குறைகளை எழுதி என்னிடத்தில் நேரடியாகக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெத்தலகாட்டூர் பெரிய ஏரிக்கரைகள்

*வினா எண். 98—திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருத்தணி தாலுக்கா மன்னூர் பிர்க்காவில் பெத்தலகாட்டூர் பெரிய ஏரியின் கரையை உயர்த்தி நீர்த்தேக்கம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் என்றால், வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தாலூகா மன்னூர் பிர்க்காவில் பெத்தலகாட்டூர் ஏரியின் மூலமாக ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்குப் பாய்ச்சல் நடைபெறுகிறது. இந்த ஏரியின் கரையை உயர்த்தவேண்டும் என்றும் அத்துடன் கண்மாய்கள் எல்லாம் பழுது பார்க்க

1979 நவம்பர் 3]

வேண்டும் என்றும் அரசுக்கு நான் தெரிவித்திருக்கிறேன். அதற்கு இப்போது நிதி ஒதுக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு வெகு சீக்கிரத்தில் நிதி ஒதுக்கம் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம் திருத்தணி தாலூகா பெத்தலகாட்டூர் ஏரி பெரிய ஏரியாக இருக்கிறது. இதன் மூலம் 1885 ஏக்கர் பாசனவசதி பெற்று வருகிறது. ஏரி நல்ல முறையில் இருக்கிறது, பழுதடையவில்லை. ஆகவேதான் இதற்கு நிதி எதுவும் ஒதுக்கம் செய்யவில்லை.

திரு. ஆர். சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிக்கரை பலப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் கண்மாய்கள் உடைபட்டு ஏரியில் வருகின்ற தண்ணீர், கண்மாய்கள் எல்லாம் பழுதுபட்டு இருப்பதால், தண்ணீர் எல்லாம் ஏரிக்கு வராமல் கழிந்துவிடுகிறது. ஆகவே, கண்மாய்களை எல்லாம் பழுது பார்த்து சீரமைக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : குறைபாடுகள் இருந்தால் அந்தக் குறைபாடுகள் நீக்கப்படும்.

Enquiry into administration of Wakf Board.

*Q. No. 99—THIRU R. UMANATH : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state :

(a) whether any enquiry into malpractices, mis-appropriation and fraudulent act committed by the wakf Board that was in existence prior to this Government took ever has been made:

(b) if so, the findings thereof ;

(c) the estimated loss sustained by the Board due to lapses of the Board ; and

(d) the action taken by Government to recover the loss?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) இல்லை.

(ஆ)
(இ) } இக்கேள்விகளுக்கு இடமில்லை.
(ஈ)